
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1116

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

149

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த அ.திரவியம் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# அ.திரவியம்; மாற்றாரும் மதித்திடும் தொண்டுள்ளம்!


ஓவியம் : ரவி பேலட்

'மிகவும் எளிமையானவர், இனிமையானவர், மாற்றாரும் மதித்திடும் தொண்டுள்ளம் படைத்தவர். குமரி மாவட்டக் கழக வரலாற்றில் நின்றிடும் முன்னணி வீரர்களில் ஒருவர்' என முத்தமிழறிஞர் கலைஞர் போற்றிய உடன்பிறப்பு திரவியம். தமிழ்நாட்டின் தென்கோடிமுனையில், அன்றைய நாஞ்சில் மாவட்டம், இன்றைய கன்னியாகுமரி மாவட்டத்தில் அகத்தீஸ்வரம் வட்டம் தெற்கு வள்ளியாவிளை கிராமத்தில் பிறந்தவர். கிளைக் கழகத்தில் இருந்து பணிகளைத் தொடங்கி, பேரறிஞர் அண்ணா காலத்திலேயே மாவட்டக் கழகத்தை கட்டுப்பாட்டுடன் வழி நடத்தியவர். நாஞ்சில் மாவட்டக் கழக முன்னோடியென, என்றும் போற்றப்படும் உடன்பிறப்பு.

திரவியம் அவர்களின் தந்தை அப்பனடிமை வைத்தியர் தாயார் ஜீவரத்தினம். ஓரளவு செல்வாக்குள்ள குடும்பம். நாகர்கோவில் கார்மெல் பள்ளியில் உயர்நிலைப் பள்ளிவரை முடித்தவர், ஸ்காட் கிருஸ்த்துவக் கல்லூரியில் பி.ஏ பட்டம் பெற்றார். அன்றைய நாஞ்சில் நாட்டு அரசியல் எழுச்சிகளில் ஆர்வம் கொண்டவர், கல்லூரி படிக்கும் காலத்திலேயே தீவிரமாக திராவிடர் கழக அரசியல் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டார்.

பின்னர், கழகம் தொடங்கிய காலத்திலேயே உறுப்பினராக தன்னை இணைத்துக் கொண்டார். குறிப்பாக, கழகத்தின் தொடக்க காலத்திலேயே நாஞ்சில் மாவட்டப் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன்பின்னர், 1956-ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை, இரண்டு முறை மாவட்டச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, கழகத்தை வழி நடத்தியவர் திரவியம்.

1954-ஆம் ஆண்டில், தமிழ்நாட்டுப் பகுதிகள் கேரளாவுடன் சேர்க்கப்பட்டதும், கொச்சி சமஸ்தானத்தில் இருந்த தமிழ்பேசும் பகுதிகள் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட வேண்டும் என, நாகர்கோவில் பகுதிகளில் போராட்டம் வலிமையாக நடைபெற்றது. துப்பாக்கிச் சூட்டில் பலர் உயிரிழந்தனர். அதற்கு கண்டனம் தெரிவித்து காந்திராமன் என்கிற தலைவர் உண்ணாவிரதம் இருந்தபோது, கழகத்தின் மாணவர்கள் ஊர்வலம் சென்றனர். அந்த ஊர்வலத்தில் முன்னணி வீரராகச் சென்று, போலீசாரின் தாக்குதலுக்கு ஆளானவர் திரவியம்.

### கருப்புக் கொடி தீர்மானம்

1957-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், நாஞ்சில் மாவட்டக் கழக 2 வது மாநாடு, நாகர்கோவிலை அடுத்த கிருஷ்ணன்கோவிலில் நடைபெற்றது. அந்த மாநாட்டில்தான், 1958-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தமிழ்நாட்டுக்கு வருகை தரும் பிரதமர் நேருவுக்கு, கருப்புக் கொடி காட்டி எதிர்ப்பைத் தெரிவிப்பது என முடிவு செய்யப்பட்டது. அந்த மாநாட்டின் நாயகராகத் திகழ்ந்த நாஞ்சில் மனோகரன், தொண்டர் படைத் தலைவர்கள் எஸ்.வி.அப்பன், ஜி.எம்.ஷா போன்ற முன்னோடிகளுக்குத் துணையாக நின்று, மாநாட்டுப் பணிகளை மேற்கொண்டவர் திரவியம்.

மாவட்டக் கழகத்தின் களப்பணிகளோடு, கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை வாசம் அனுபவித்தவர். நாஞ்சில் நாட்டு எல்லைப் போராட்டங்கள், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், கருப்புக் கொடிகாட்டும் போராட்டங்களில் அவரது முன்னிலைப் பாத்திரம் மாவட்டக் கழக வரலாற்றில் இன்றும் நினைவுகூரப்படும்.

1964 சட்டநகல் எரிப்புப் போராட்டத்தில் கழக முன்னோடி நாஞ்சில் மனோகரன் அணியில் இடம் பெற்று சிறை சென்றுள்ளார். 1976 ஆம் ஆண்டில் மிசா நெருக்கடி நிலை காலத்தில் கைது செய்யப்பட்டு, ஓராண்டுக்கு மேல் பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

கழகம் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பின்னரும், நாகர்கோவிலில் தனது வழக்கமான களப்பணியை திரவியம் நிறுத்தியதில்லை என்கின்றனர் மாவட்டக் கழகத்தினர். 1974-ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டக் கழகத்துக்கு என, நாகர்கோவிலில் கழகப் பணிமனை கட்டி முடித்தவர். மாவட்டக் கழகத்தினர் ஒத்துழைப்புடன் நிதி திரட்டி, கழகத்துக்கு என கட்டப்பட்ட அந்த சொந்தக் கட்டிடத்தை கலைஞர் அவர்களை அழைத்து வந்து திறக்க வைத்ததை, அவரது கழகப் பணியின் ஆற்றலுக்குச் சான்றாக இன்றும் குறிப்பிடுகின்றனர்.

### மக்களிடம் கொண்டிருந்த செல்வாக்கு

ஈத்தாமொழி ஊராட்சி மன்றத் தலைவராக ஐந்தாண்டு காலம், மக்கள் பெருமையாகச் சொல்லும் வகையில், சிறப்புடன் செயல்பட்டவர். குமரி மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியிலும், மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை இயக்குநராக இருந்து திறம்பட செயல்பட்டவர். குமரி மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் உறுப்பினராக இருந்தும், மக்களுக்கான பணிகளை முன்னெடுத்தவர் திரவியம்.

1980 காலகட்டங்களில், எம்.ஜி.ஆரிடமிருந்து அழைப்பு வந்தும், அதைப் புறக்கணித்து, கழகமே தனது இயக்கம் என உறுதியாக நின்றார். திரவியம் அவர்களில் களப்பணியை அறிந்தவர் எம்.ஜி.ஆர். 1982-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டையே உலுக்கிய மண்டைக்காடு கலவரத்தின்போது, அதைக் கட்டுப்படுத்தும் பணிகள் கடும் நெருக்கடியாக இருந்தன. சட்டமன்றத்தில் கலைஞர் அரசின் செயல்பாடுகளை கேள்வி எழுப்பினார். களத்துக்கு பார்வையிட வந்த எம்.ஜி.ஆர், காவல்துறை அதிகாரிகளோடு மாவட்டத்தின் எதிர்க்கட்சிப் பிரமுகர்களை அழைத்து, ஆலோசித்தார். குறிப்பாக, திரவியம் அவர்களோடும் ஆலோசித்து செயல்படுக என எம்.ஜி.ஆர். குறிப்பிட்டதை, கழகத்தினர் அவரது ஆற்றலுக்குச் சான்றாகச் சொல்கின்றனர். அந்த அளவுக்கு மதிநுட்பமாகவும், அனைத்து சமூக மக்களோடும் இணக்கமான அரசியல் பணிகளை மேற்கொண்டிருந்தவர் திரவியம்.

தலைவரிடமும் தொண்டர்களிடமும் பாசப்பிணைப்புடன் பழகிடும் இனிமையானவர். இவரது கழகப் பணிகளை பெருமைப்படுத்தும் வகையில், 1993 ஆம் ஆண்டில் கழகத்தின் முப்பெரும் விழா விருதுகளில் கலைஞர் விருதினை தனது கைகளால் வழங்கி பெருமை சேர்த்தார் கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர். அறுபது வயதைக் கடந்து கழகப் பணிகளில் தீவிரம் காட்டியவர், வயது மூப்பு காரணமாக அரசியல் பணிகளைக் குறைத்துக் கொண்டிருந்த நாட்களில் 2002 ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார். இப்போதும் மாவட்டக் கழகத்தினர் திரவியம் அவர்களின் பெரும் பணிகளைப் போற்றுகின்றனர். காலங்களைக் கடந்து அவர் நினைவுகூரப்படுவார். பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, முத்தமிழறிஞர் கலைஞரின் உடன்பிறப்பாக.

> **"கழகத்தின் முப்பெரும் விழா விருதுகளில் கலைஞர் விருதினை தனது கைகளால் வழங்கி பெருமை சேர்த்தார் கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர்."**

...துடிக்கும்

## 'அகஸ்தியர் - ஒரு மீள்பார்வை' - இலவசப் பதிவிறக்கம்!

சிந்துவெளி ஆய்வு மையத்தின் மதிப்புறு ஆலோசகர் ஆர். பாலகிருஷ்ணன், 2025 –ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், 'அகஸ்தியர் – ஒரு மீள்பார்வை' என்ற தலைப்பில் நிகழ்த்திய சொற்பொழிவு பெரும் கவனத்தைப் பெற்றது. அந்தச் சொற்பொழி வின் நூலாக்கத்தை ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்வதற்கான இணைப்பை வெளியிட்டுள்ளது. திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள், அதைத் தொடங்கி வைத்துள்ளார்.

இது தொடர்பாக, ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் வெளியிட்டுள்ள பதிவில், 'அகஸ்தியர் தமிழைத் தோற்றுவித்தார்' என்பது போன்ற பல கட்டுக்கதைகள், திடீரென பெரும் உரையாடல்களாக மாறத் தொடங்கிய நிலையில், அதற்கு எதிர்வினையாற்றும் பொருட்டு, அகஸ்தியர் குறித்த கட்டுக்கதை களைத் தரவுகளைக் கொண்டு கட்டுடைக்கும் நோக்கில் அந்த உரை இருந்தது. நூலாக்கம் பெற்ற அந்த உரையை, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் 2025 ஆகஸ்ட் 19 அன்று ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் வெளியிட்டார்.

'அகஸ்தியர்– ஒரு மீள் பார்வை' நூல், பரவலான வரவேற்பைப் பெற்றிருக்கும் நிலையில், உலகிலுள்ள தமிழர்கள் அனைவருக்கும் சென்றுசேரும் வகையில், இந்நூலை இலவசமாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளும்படி இணையத்தில் வழங்குகிறோம்' என அறிவித்துள்ளது.

ஆர்.பாலகிருஷ்ணன் மற்றும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் இயக்குநர் சுந்தர் கணேசன் கலந்துகொள்ள, பிப்ரவரி 17–ஆம் தேதி, ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் இந்த இணைப்பைத் தொடங்கி வைத்தார். 'அகஸ்தியர் – ஒரு மீள் பார்வை' நூலை, கீழுள்ள இணைப்பில் இலவச மாகப் பதிவிறக்கிக்கொள்ளலாம்.

## ஃப்ளாஷ்பேக்


ராசி.மணிவாசகன்



### அந்நாள் ஒரு பொன்னாள்!

1992-ஆம் ஆண்டு, கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் பிறந்த நாளன்று, தஞ்சையில் இருந்து இலக்கிய நண்பர்கள் கவிஞரை சந்திக்கச் சென்றிருந்தோம். அன்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் வாழ்த்துப் பெற கவிஞர், கோபாலபுரம் இல்லத்துக்கு எங்களையும் அழைத்துச் சென்றார். கவிஞர், கலைஞரைக் காண முதல் தளம் சென்றுவிட, நாங்கள் அனைவரும் காத்திருந்தோம். அந்த நேரத்தில், நான் அஞ்சலட்டையில் கோட்டோவியமாகக் கலைஞரை வரைந்து வைத்திருந்தேன். அவர்கள் கீழிறங்கி வந்தபோது, அனைவரும் அவரிடம் ஆட்டோகிராப் வாங்கியபோது, அவர் உருவம் வரைந்த அஞ்சலட்டையை நான் நீட்டினேன். அதை சற்று ஆச்சர்யத்துடன் பார்த்து, 'யாருய்யா வரைஞ்சது?' எனக் கேட்க, 'நான்தான்யா' என்றேன் நான். 'நல்லாருக்குயா' என்றபடியே அதில் கையொப்பமிட்டார். இப்படத்தில் உடன் நிற்கும் 'யோகம்' இரா.செழியன், பாடலாசிரியர் வாசன், நடிகர் தரும சரவணன் உள்ளிட்ட அனைத்து நண்பர்களுக்கும் அந்நாள் ஒரு பொன்னாளே!.

**– ராசி.மணிவாசகன், திரைப்பட இயக்குநர், பாடலாசிரியர், தஞ்சாவூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### பலம் அதிகரிக்க வேண்டும்!

1958-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5-ஆம் தேதி, கோவை மாவட்டக் கழகத்தின் 3-வது மாநாடு நடைபெற்றது. 2,000 பேர் கலந்துகொண்ட சைக்கிள் பேரணி நடைபெற்றது. 40 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அப்போது கழகத்துக்கு 15 சட்டமன்ற உறுப்பினர்களும். 2 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருந்தனர். தனது உரையில், அதைக் குறிப்பிட்ட பேரறிஞர் அண்ணா, 'இப்பலம் இன்னும் அதிகரிக்கும்விதத்தில் கழகத் தோழர்களின் பணிகள் இருக்க வேண்டும்' என வேண்டுகோள் விடுத்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131